கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 04.06.2025

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் சார்பில்**
**மத்திய தொழில்துறை பாதுகாப்புப் படை அதிகாரிகளுக்கு தேனீ வளர்ப்புப் பயிற்சி**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பயிர் பாதுகாப்பு மையம், பூச்சியியல் துறை சார்பில் விமான நிலையத்தில் அமைந்துள்ள மத்திய தொழில்துறை பாதுகாப்புப் படை அதிகாரிகளுக்கு தேனீ வளர்ப்புப் பயிற்சி மே 29, 2025 (வியாழக்கிழமை) அன்று ஏற்பாடு செய்யப்பட்டது. மத்திய பாதுகாப்புப் பணியாளர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இப்பயிற்சியின் முக்கிய நோக்கமாகும். இப்பயிற்சியில் விவசாயம், வனச்சுற்றுச்சூழல் அமைப்பு, மருத்துவம் மற்றும் பிற துறைகளில் தேனீக்களின் பங்கு குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் பல்வேறு தேனீ இனங்களை அடையாளம் காணுதல், தேனீக்கூடுகளைக் கையாளுதல், ஆய்வு செய்தல், கூடுகளை ஒன்றிணைத்தல், பிரித்தல் மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட தேனீ பொருட்களின் உற்பத்தி குறித்து அடிப்படை விளக்கம் வழங்கப்பட்டது.

புதிதாக தேனீக்கூடுகளை நிறுவுதல் மற்றும் அதன் மேலாண்மை குறித்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பூச்சியியல் துறை பேராசிரியர் முனைவர் மா.இரா.சாமிநாதன் விளக்கினார். கூடுதலாக, தேனீக்கள் கொட்டுவது குறித்த அச்சத்தைப் போக்க தேனீ சட்டங்களை கையாளுதல் குறித்தும் அதிகாரிகளுக்கு செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. இந்த பயிற்சிக்கு மூத்த தளபதி ஸ்ரீ.சஷி ரஞ்சன் மற்றும் துணை தளபதி ஸ்ரீ.ஹக்கீம் ஆசிப் யூசுப் (CRPF) ஆகியோர் தலைமை தாங்கினர். மேலும் இப்பயிற்சியில் பல்வேறு மத்திய தொழில்துறை பாதுகாப்பு படை அதிகாரிகள் பங்கேற்று, இந்தப் பயிற்சி தங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்ததாகப் பாராட்டினர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**